1989 ஏப்ரல் 4]

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி.

26—(*வினா எண். 797) **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி நிறுவும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற் குறிப்பு தற்போது இல்லை. எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொரு யூனியனிலும் படித்தவர்கள் நிறைந்து இருக்கின்றார்கள். 200 ரூபாய் சம்பளத்திலே வேலை அளிப்பதற்கான சில திட்டங்களை அரசு போட்டிருக்கிறது. ஐ. ஆர். டி. பி., ஐ.யூ. டி.பி. மூலமாக கடன் வாங்கி தொழிற் நடத்துவதுகூட தெரியாமல் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்து, ஒரு யூனியனுக்குக் கூட வேண்டாம். ஒவ்வொரு தொகுதிக்காவது இப்படிப்பட்ட பயிற்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் என்றாலும் கூட, 384 ஒன்றியங்களுக்கும் 192 கோடி ரூபாய் வருகிறது. அந்தப் பெரும் தொகையைக் கணக்கிட்டுத்தான் இப்போது அரசாங்கம் இருக்கின்ற நிலையில் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து நல்ல கருத்து என்கின்ற அடிப்படையில், அந்த இலக்கு நோக்கி அரசினுடைய நடவடிக்கைகள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியதற்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதை நிச்சயமாகச் செய்ய வேண்டும். காரணம், பி.ஏ., படித்தவர்கள், எம். ஏ. படித்தவர்கள் போன்ற

வர்களுக்கு பேங்க் மூலமாக சொல்லி அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தாலும், அந்தத் தொழிலை எப்படி நடத்துவது என்று தெரியாமல் திண்டாடுவதுடன், இரண்டாண்டுகளுக்கு உள்ளாக அந்தப் பணத்தையும் கட்டுவது இல்லை. அந்தக் கடனைப் பெற்று தொழிலையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் இங்கு கூறியதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு விட்டீர்கள். இருந்தாலும், இதைக் கண்டிப்பாக அமல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார், ஏராளமான இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களை அமைத்து அதன் மூலமாக ஏராளமானவர்கள் படித்து விட்டு, 5 ஆண்டு, 7 ஆண்டுக் காலமாக ஆயிரம் கணக்கில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்து இப்போது இருக்கின்ற, பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை அளிக்கின்ற வகையில், தனியார் நடத்துகின்ற அந்த பயிற்சிப் பள்ளிகளை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. என்பது தொழிற் பயிற்சி நிலையம். இது என்னுடைய துறையைச் சார்ந்த ஒன்று இதன் மூலமாக பயிற்சி பெற்றவர்கள் ஓரளவிற்கு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பயிற்சி நிலையங்களுக்கு தடை விதிக்கப்படுமா என்று கேட்டார்கள். தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு Affiliation கொடுக்கின்றபொழுது National Vocational Council என்கின்ற மத்திய அமைப்பின் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. அந்த நிபந்தனைகளை யாராவது மீறி இருந்தால் தான் அந்த அனுமதியை ரத்து செய்ய இயலும். எனவே, அந்த வகையில் அரசு கவனமாகப் பார்த்து, நிபந்தனைகளை மீறியிருந்தால் ரத்து செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

(முற்பகல் 9-30)

திரு. ஆர். சாமிநாதன் : தலைவரவர்களே, எனது தொகுதியில் திருமங்கலம் ஒன்றியத்தில் செக்கானூரில் கடந்த 20 ஆண்டு காலமாக ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அது பிற்பட்டோர் மாணவர்களுக்கும், சீர்மரபினர் மாணவர்களுக்கும் நடைபெறுகின்ற ஒரு பயிற்சி நிலையம். அங்கே 20 ஆண்டு காலமானாலும்

1989 ஏப்ரல் 4]

மிகவும் பிற்பட்ட முறையிலேதான் தொழிற் பயிற்சி கற்பிக்கப் படுகிறது. இந்த நிலையை மாற்றி, நவீன முறையிலான தொழிற் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் நடத்துகின்ற தொழிற் பயிற்சி மையங்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெறாமல் இருந்தால் தான் அவற்றை எடுக்க முடியும் என்று சொன்னார்கள். குறிப்பாக, ஏராளமானவர்கள் அரசின் அனுமதி பெற்றும், அனுமதி பெறாமலும் தொழில் பயிற்சிப் பள்ளிகளை தொடங்கி, மாணவர்களிடம் நன்கொடை என்ற பெயரால் ஏராளமான பணத்தைப் பெற்றும் அந்த மாணவர்கள் படித்த பிறகு பரீட்சை எழுத முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தனியார் ஆரம்பிக்கும் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு சரியான கட்டட வசதி இல்லாத காரணத்தாலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, முழுமையாக, 'ரெகுலரைஸ்' பண்ணி, விதிமுறைகளுக்கு உட்படாமலும் உரிய கட்டட வசதி இல்லாமலும் இருக்கிற தனியார் பள்ளிகளை அரசே ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் எங்காவது தொழிற் பயிற்சி நிலையங்கள் 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்'' தேவையான உபகரணங்கள் இல்லாமல் நடைபெறுவதாகத் தெரிந்தால் 'அஃபிலியேஷன்' என்ற அந்த நடவடிக்கையை ரத்து செய்ய இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி தொழில் வளர்ச்சி இல்லாத ஒரு தொகுதி. அங்கே இருக்கிற மாணவர்கள் தொழிற் கல்வி இல்லாமல் துன்புறுகிறார்கள். அவர்கள் தொழிற்கல்வி படிக்க வசதிசெய்து கொடுத்தால், ஒரு ஐ. டி. ஐ. ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மாணவர்கள் சுய வேலைவாய்ப்பு பெறுவதற்குக் கூட வசதியாக இருக்கும் என்பதால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும்.

புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்குதல்.

(*27—வினா எண். 223) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்கும் உத்தேசம்அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்களைத் தொடங்குகிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கத் தஞ்சை மாவட்டத்தில் அதிகமான குழந்தைகள் நல மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, வரும் நிதியாண்டில் எந்த எந்த மாவட்டத்தில் புதிய குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க தேவை ஏற்படும் என்பதை ஆராய்ந்து அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பச் சொல்லி ஆங்காங்கே இருக்கிற மாவட்ட சமூக நல அதிகாரிகளுக்கு அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பகுதியில் குழந்தைகள் அதிகமாக இருக்கிற இடத்தில் இப்படிப்பட்ட மையங்கள் தேவை என்று கருதினால் தஞ்சை மாவட்ட சமூக நல அதிகாரியைச் சந்தித்து அதற்கான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நர்சரி பள்ளிகளைப் போன்று அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் குழந்தைகள் நல மையங்கள் இப்படிப்பட்ட நர்சரிப் பள்ளிகளாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் நல